**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்–2016–17 ஆம் நிதியாண்டு – திட்டத் தொடராணை மற்றும் ரூ.7.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.11

நாள்:14–02–2017
துன்முகி, மாசி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.51, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்08–12–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2973/சிபதி/ 2016, நாள் 15.07.2016 மற்றும் 30.09.2016.

--------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2015–2016 ஆம் நிதியாண்டில், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.650.07 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில், ஏனையவற்றுடன் 2016–2017ஆம் நிதியாண்டில், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்து, 2016–2017 ஆம் நிதியாண்டில், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.7.00 கோடி (ரூபாய் ஏழு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும் இக்கல்வி உதவித் தொகையை மாணவ/மாணவிகளுக்கு பூஜ்ஜிய இருப்பு வங்கி கணக்கு துவங்கி அதன் மூலம் வழங்கவும் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது BB மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள்–12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும்– 09– ஏனையவை”
(த.தொ.கு 2235–02–101–BB–1290)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.4419/நிதி(சந)/2017, நாள் 08.02.2017ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)
**<u>நகல்:–</u>**
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.